ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

அறிவுறுத்தல்கள் :

- பகுதி **II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி **III** இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையளித்தல் வேண்டும்.
- இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக 1 : 50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும், உலகப் புறவுருவப் படமும், வரைபுத்தாள் ஒன்றும் வழங்கப்படும்.

## பகுதி II

**1.** இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50 000 அளவுத்திட்டத்தில் அமைந்த மாத்தறை இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. சமவுயரக் கோடுகள் 100 அடி இடைவெளியில் காட்டப்பட்டுள்ளது. இப் படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

குறிப்பு :
- விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் அதன் உப பிரிவுகளின் இலக்கங்களையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
- இடவிளக்கப் படத்தின் மேல் விடைகள் எழுதப்படக்கூடாது.
- உமது விடைத்தாளுடன் தரப்பட்டுள்ள இடவிளக்கப் படத்தினை இணைக்க வேண்டாம்.

(i) படப் பகுதியில் Ⓐ, Ⓑ மற்றும் Ⓒ எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ள **மூன்று** கரையோர நிலவுருவங்களைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) படப் பகுதியில் Ⓓ மற்றும் Ⓔ என்பதினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள **இரண்டு** நிர்வாக எல்லைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(iii) நாற்பக்கல் Ⓕ இல் இளஞ்சிவப்பு நிறத்தில் காட்டப்படும் அம்சத்தினைப் பெயரிடுக. (01 புள்ளி)

(iv) நாற்பக்கல் Ⓖ இனால் உள்ளடக்கப்பட்டுள்ள பகுதியினை சதுரக் கிலோமீற்றரில் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) நாற்பக்கல் Ⓗ இல் எடுத்துக் காட்டப்பட்டுள்ள பயிர் வகையினைப் பெயரிடுக. (01 புள்ளி)

(vi) நாற்பக்கல் Ⓙ இல் இரண்டு உயர் நிலங்களுக்கிடையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள அம்சத்தினைப் பெயரிடுக. (01 புள்ளி)

(vii) படப் பகுதியில் காணப்படும் நெல் மற்றும் தெங்குச் செய்கையின் பரம்பல் பாங்கினைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(viii) படப் பகுதியில் காணப்படும் மானிடக் குடியிருப்புப் பாங்கினுக்குப் பங்களித்துள்ள புவியியற் காரணிகள் **மூன்றினை** விளக்குக. (06 புள்ளிகள்)

**2.** தரப்பட்டுள்ள உலகப் படத்தில், வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

- பரீஸ்
- ஈரான்
- கஸ்பியன் கடல்
- வொல்கா நதி
- பாக்கு நீரிணை
- சுப்பீரியர் ஏரி
- கொக்கைடோ தீவு
- கிளிமஞ்சாரோ மலை
- பிரித்தானிய பொதுநலவாயத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள நகரம்
- 2024 இல் 'மில்ரன்' ஹரிக்கேனினால் பாதிக்கப்பட்ட வட அமெரிக்காவின் குடாநாடு (10 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/ CamScanner

06642

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

22 I

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I




SCALE 1 : 50,000

සමෝච්ච රේඛා අන්තරය අඩි 100
சமவுயரக்கோட்டு இடைவெளி 100 அடி
Contour Interval 100 feet

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/ CamScanner

## பகுதி III

3. (i) முதனிலைத் தரவு மற்றும் இரண்டாம் நிலைத்தரவு என்பதினால் கருதப்படுவது யாது என்பதை உதாரணங்களுடன் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பண்புசார் தரவு மற்றும் அளவுசார் தரவு ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடு யாது? (02 புள்ளிகள்)

(iii) இடம்சார் தரவு மற்றும் காலரீதியான தரவு என்பவற்றைச் சுருக்கமாக உதாரணங்களுடன் விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கூட்டமாக்கப்படாத தரவு என்பதினால் கருதப்படுவது யாது என்பதை விபரித்து, கூட்டமாக்கப்படாத தரவுகள் ஏன் கூட்டமாக்கப்பட்ட தரவுகளாக மாற்றப்படுகின்றன என்பதை இரண்டு உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

4. (i) புவியியலில் படம் ஏன் முக்கியமானது என்பதற்கு இரண்டு காரணங்கள் தருக. (02 புள்ளிகள்)

(ii) இடவிளக்கப் படமொன்றில் காணப்படும் புற எல்லைத் தகவல்களுள் மூன்றினை புனையா வரைபடமொன்றின் உதவியுடன் குறித்துப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iii) புவியியலில் பயன்படுத்தப்படும் இரண்டு நவீன படவரைகலையியல் தொழில்நுட்பங்களைச் சுருக்கமாக ஆராய்க. (04 புள்ளிகள்)

(iv) நவீன படவரைகலையியல் முறைகளின் நடைமுறை சார்ந்த மூன்று அனுகூலங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

5. அட்டவணை 1 இல் தவணைப் பரீட்சையொன்றில் புவியியல் பாடத்தில் 30 மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் தரப்பட்டுள்ளன. அட்டவணையில் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

அட்டவணை 1 : புவியியலில் தவணைப் பரீட்சையொன்றில் 30 மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 38 | 66 | 43 | 9 | 33 | 64 | 92 | 25 | 73 | 48 |
| 45 | 55 | 54 | 16 | 40 | 72 | 52 | 34 | 28 | 55 |
| 55 | 57 | 65 | 24 | 52 | 80 | 65 | 42 | 37 | 68 |

அட்டவணை 2

| வகுப்பு ஆயிடை | மீடிறன் ($f$) | நடுப்பெறுமானம் ($x$) | $fx$ |
|---|---|---|---|
| 0 - 9 | | | |
| 10 - 19 | | | |
| 20 - 29 | | | |
| 30 - 39 | | | |
| 40 - 49 | | | |
| 50 - 59 | | | |
| 60 - 69 | | | |
| 70 - 79 | | | |
| 80 - 89 | | | |
| 90 - 99 | | | |

(i) மேலே தரப்பட்டுள்ள அட்டவணை 2 இனை உமது விடைத்தாளில் பிரதிசெய்து அதில் மீடிறன் ($f$), நடுப்பெறுமானம் ($x$) மற்றும் $fx$ ஆகியவற்றின் கணிக்கப்பட்ட பெறுமானங்களைக் கொண்டு பூர்த்தி செய்க. (06 புள்ளிகள்)

(ii) அட்டவணையின் 2 இல் உள்ள உம்மால் பூர்த்திசெய்யப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி மாணவர்கள் பெற்றுக்கொண்ட மதிப்பெண்களுக்கான இடையைக் கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) கணிப்பிடப்பட்ட இடையினைத் தொடர்புபடுத்தி, மாணவர்களின் பெறுபேறுகளில் காணப்படும் மூன்று முனைப்பான அம்சங்களைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

[பக். 9 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/ CamScanner

**6.** 2018 தொடக்கம் 2022 வரைப்பட்ட காலத்தில் இலங்கையின் பிரதான இறக்குமதிகளின் கொள்ளளவு கீழே அட்டவணை 3 இல் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 3 : இலங்கையின் பிரதான இறக்குமதிகளின் கொள்ளளவு 2018 - 2022 (ஆயிரம் மெற்றிக் தொன்களில்)**

| இறக்குமதிகள் | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 4959 | 4740 | 4028 | 4553 | 3927 |
| கோதுமை | 1297 | 1159 | 1404 | 1307 | 583 |
| மசகு எண்ணெய் | 1674 | 1842 | 1667 | 1182 | 649 |
| உரங்கள் | 861 | 707 | 952 | 412 | 363 |
| அரிசி | 249 | 24 | 16 | 147 | 783 |

மூலம் : *இலங்கை மத்திய வங்கி, வருடாந்த அறிக்கை, 2023*

(i) 2018 தொடக்கம் 2022 வரைப்பட்ட காலத்துக்குரிய இலங்கையின் பிரதான இறக்குமதிகளின் கொள்ளளவினை எடுத்துக் காட்டுவதற்கு பல்கோட்டு வரைபு ஒன்றினை வரைந்து காட்டுக (இதற்காக வரைபுதாளைப் பயன்படுத்துக). (08 புள்ளிகள்)

(ii) நீர் வரைந்த வரைபினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் பிரதான இறக்குமதிகளின் கொள்ளளவில் காணப்படும் நான்கு முனைப்பான அம்சங்களை விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) அட்டவணை 3 இல் தரப்பட்டுள்ள தரவுகளை எடுத்துக்காட்டுவதற்குப் பயன்படுத்தக் கூடிய வேறொரு வரைபு முறையினைப் பெயரிட்டு அதன் பொருத்தப்பாட்டினை இரண்டு காரணங்கள் தந்து விளக்குக. (03 புள்ளிகள்)

❊ ❊ ❊

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/ CamScanner

6643



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

භූගෝල විද්‍යාව II
புவியியல் II
Geography II

22 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I - பௌதிகப் புவியியல்

1. (i) கற்கோளத்தில் காணப்படும் **நான்கு** பிரதான தகடுகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) தகட்டசைவுடன் இணைந்து காணப்படும் **மூன்று** வகையான நகர்வுகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)
   (iii) கற்கோளத்தில் அமுக்க விசை நகர்வுகளுடன் இணைந்து காணப்படும் **இரண்டு** வகையான மடிப்புக்களைப் பொருத்தமான வரைபடங்களுடன் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) கற்கோளத்தில் இழுவிசை நகர்வுகளினால் உருவாக்கப்படும் **இரண்டு** வகையான குறைகளைப் பொருத்தமான வரைபடங்களுடன் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

2. (i) இலங்கையில் அடிக்கடி நிலச்சரிவுகள் இடம்பெறும் நான்கு மாவட்டங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) நிலச்சரிவுகளின் **இரண்டு** வகைகளைப் பொருத்தமான வரைபடங்களுடன் விவரிக்குக. (06 புள்ளிகள்)
   (iii) இலங்கையில் நிலச்சரிவுகளுக்குக் காரணமான பிரதான பௌதிகக் காரணிகள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) இலங்கையில் நிலச்சரிவுகளின் நிகழ்வினை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் **மூன்றினை** ஆராய்க. (06 புள்ளிகள்)

3. (i) உலகில் புல்நிலங்கள் மற்றும் சவன்னா நிலங்கள் காணப்படும் பிரதான பகுதிகள் **நான்கினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) புல்நிலங்கள் மற்றும் சவன்னா நிலங்களின் முனைப்பான அம்சங்கள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)
   (iii) உலகில் தற்பொழுது புல்நிலங்கள் மற்றும் சவன்னா நிலங்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகள் **மூன்றினைச்** சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)
   (iv) இலங்கையில் பத்தனைப் புல்நிலங்கள் எதிர்நோக்கும் பிரதான அச்சுறுத்தல்கள் **மூன்றினைப்** பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

4. (i) இலங்கைக்கு மழைவீழ்ச்சி கிடைக்கும் பிரதான முறைகள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) மேலே 4 (i) இல் உம்மால் குறிப்பிடப்பட்ட முறைகளுள் **ஒன்றினைத்** தெரிவுசெய்து அதன் முனைப்பான அம்சங்கள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)
   (iii) மழைவீழ்ச்சி மற்றும் வெப்பநிலைப் பரம்பலின் அடிப்படையில் இலங்கை ஐந்து காலநிலை வலையங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அக்காலநிலை வலையங்களுள் **ஒன்றினைத்** தெரிவுசெய்து அவ் வலையத்தின் பிரதான பண்புகள் **மூன்றினை** விவரிக்குக. (06 புள்ளிகள்)
   (iv) இலங்கையின் காலநிலையில் காணப்படும் தனிச்சிறப்பான பண்புகள் **மூன்றினைச்** சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/ CamScanner

## பகுதி II - மானிடப் புவியியல்

**5.** அட்டவணை 1 இல் 1950 - 1955 இல் இருந்து 2015 - 2020 வரையான காலத்தில் உலகினதும் அதன் பிரதான பிரதேசங்களினதும் பரும்படியான பிறப்பு வீதம் எடுத்துக்காட்டப்படுகின்றது. அட்டவணையில் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

**அட்டவணை 1 : உலகம் மற்றும் அதன் பிரதான பிரதேசங்களின் பருமட்டான பிறப்பு வீதம் 1950 - 1955 தொடக்கம் 2015 - 2020 வரை**

| பிரதேசம் | 1950 - 1955 | 1970 - 1975 | 1990 - 1995 | 2010 - 2015 | 2015 - 2020 |
|---|---|---|---|---|---|
| ஆபிரிக்கா | 47.9 | 46.0 | 40.5 | 35.9 | 33.5 |
| ஆசியா | 42.0 | 34.9 | 24.2 | 17.6 | 16.4 |
| ஐரோப்பா | 21.5 | 15.6 | 11.5 | 10.9 | 10.4 |
| லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் | 42.5 | 35.0 | 25.7 | 17.7 | 16.5 |
| வட அமெரிக்கா | 24.4 | 15.6 | 15.3 | 12.4 | 11.8 |
| ஓசானியா | 27.8 | 23.9 | 19.8 | 17.4 | 16.7 |
| உலகம் | 36.9 | 31.5 | 24.2 | 19.5 | 18.5 |

Source : *Statista.com/Statistics/805069/Birthrate_worldwide*

(i) பருமட்டான பிறப்புவீதம் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) உலகின் பிரதான பிரதேசங்களுக்கிடையே பருமட்டான பிறப்பு வீதத்தில் காணப்படும் புவியியல் பாங்கினை **மூன்று** உதாரணங்களுடன் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) உலகின் பிரதான பிரதேசங்களில் உரிய காலப் பகுதியில் பருமட்டான பிறப்பு வீதத்தில் காணப்படும் **மூன்று** போக்குகளை உதாரணங்கள் தந்து சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) உயர் பிறப்பு வீதத்தினைக் கொண்டிருக்கும் நாடொன்று எதிர்நோக்கும் **மூன்று** பிரதான பிரச்சினைகளைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

**6.** (i) பல்தேசியக் கம்பனி என்பது யாது? (02 புள்ளிகள்)

(ii) உலகம் முழுவதிலுமுள்ள பல்தேசியக் கம்பனிகளின் பரம்பலுக்குப் பங்களிக்கும் **மூன்று** காரணிகளைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) பல்தேசியக் கம்பனிகள் தற்பொழுது எதிர்நோக்கும் **மூன்று** பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்துக்குப் பல்தேசியக் கம்பனிகளின் பங்களிப்பினை **மூன்று** உதாரணங்களுடன் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

**7.** (i) வாழ்க்கைப் பயிர்ச்செய்கை என்பதினால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் வாழ்க்கைப் பயிர்ச்செய்கையின் பண்புகள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையில் விவசாயத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் பாரம்பரிய நீர்ப்பாசன முறைகள் **இரண்டினை** ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் விவசாயம் எதிர்நோக்கும் **மூன்று** சவால்களைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**8.** அட்டவணை 2 இல் உலகின் நிலக்கரி இருப்புகளும் (2020) நிலக்கரி உற்பத்தியும் (2021) நாடுகளின் அடிப்படையில் எடுத்துக்காட்டப்படுகின்றது. அட்டவணையிலுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அட்டவணை 2 : நாடுகளின் அடிப்படையில் உலக நிலக்கரியின் இருப்புகளும் (2020) உற்பத்தியும் (2021)**

| நாடு | இருப்புக்கள் (மில்லியன் மெற்றிக் தொன்னில்) (2020) | உலக மொத்த இருப்பின் சதவீதம் (%) (2020) | உற்பத்தி (மில்லியன் மெற்றிக் தொன்னில்) (2021) | உலக மொத்த உற்பத்தியின் சதவீதம் (%) (2021) |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 248 941 | 23.2 | 528 | 6.6 |
| ரஷியா | 162 166 | 15.1 | 435 | 5.4 |
| அவுஸ்திரேலியா | 150 227 | 14.0 | 467 | 5.7 |
| சீனா | 143 197 | 13.3 | 4 126 | 51.2 |
| இந்தியா | 111 052 | 10.3 | 762 | 9.5 |
| ஜேர்மனி | 35 900 | 3.3 | 126 | 1.6 |
| இந்தோனேசியா | 34 869 | 3.3 | 614 | 7.6 |
| உக்கிறேய்ன் | 34 375 | 3.2 | 25 | 0.3 |
| போலாந்து | 28 395 | 2.6 | 107 | 1.3 |
| கஷாக்ஸ்தான் | 25 605 | 2.4 | 89 | 1.1 |
| ஏனைய நாடுகள் | 99 381 | 9.3 | 788 | 9.7 |
| உலகம் | 1 074 108 | 100.0 | 8 067 | 100.0 |

மூலம் : *BP Statistical Review of World Energy, 2021*

(i) நிலக்கரி எவ்வாறு உருவாகின்றது என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) அட்டவணை 2 இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ள உலக நிலக்கரி இருப்புகளின் பரம்பலில் காணப்படும் முனைப்பான அம்சங்கள் **மூன்றினைச்** சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) அட்டவணை 2 இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ள உலக நிலக்கரி உற்பத்தியில் காணப்படும் முனைப்பான அம்சங்கள் **மூன்றினைச்** சுருக்கமாக ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) சுரங்கக் கைத்தொழில் என்ற வகையில் நிலக்கரியுடன் இணைந்து காணப்படும் **மூன்று** பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

❊ ❊ ❊

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/ Scanner